29—

மீன் உலர் தளம்

•14116—திரு. மு.க. பெரியசாமி:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, மாணிக்கபங்கு ஊராட்சி, பெருமாள்பேட்டை கிராமத்தில் மீன் உலர் தளம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், பூம்புகார் சட்டப் பேரவைத் தொகுதியில் உள்ள பெருமாள்பேட்டை மீனவர் கிராமம் சுனாமியால் பாதிக்கப்பட்ட [illegible] என்ற தொண்டு நிறுவனம், அந்தக் கிராமத்திற்கு இரண்டு மீன் உலர் தளங்களை 3,894 சதுர அடி பரப்பளவில் அமைத்துக் கொடுத்துள்ளது. இம்மீன் உலர் தளம் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 டிசம்பரில் தமிழகமே மிகவும் அதிர்ந்து கலங்கக்கூடிய அளவுக்கு ஆழிப்பேரலை ஏற்பட்டது. அந்த ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய பல்வேறு திட்டங்களால் தொண்டு நிறுவனங்கள் நிரந்தரக் குடியிருப்பு, குடிநீர், மின் இணைப்பு போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருக்கின்றன. அந்தப் பாதிப்பினால் வங்கக் கடலிலும் மீன்வளம் குன்றியிருக்கிறது. அப்படிக் குன்றியிருக்கிற அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவ மக்களுக்கு – தமிழகத்திலேயே அதிகம் பாதித்த மாவட்டம் நாகை மாவட்டம் – இப்போது விசைப் படகுகளுக்கு 1,500 லிட்டர் மண்ணெண்ணெய்யும், சிறு நாரிழைப் படகுகளுக்கு மாதம் 250 லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்படுகிறது. அதை மாதா மாதம்தான் பெற வேண்டும் என்ற

2007 அக்டோபர் 22]

நிலை இருக்கிறது. அதை எப்போது வேண்டுமானாலும் பெறுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும், பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் கட்டுவது தொடர்பாக, கடந்த சட்டமன்றப் பேரவையில், ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, அது முடிந்தவுடன் பணிகள் முடுக்கிவிடப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பணியின் முன்னேற்றம் எந்த அளவில் இருக்கிறது எனத் தங்கள் வாயிலாக நமது அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். மேலும், கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் 110 கோடிக்கு அந்த மீனவர்களுக்கு மிதி வண்டி, உயிர் காப்பு உடை, டார்ச் லைட் மற்றும் ஹாட் பேக் போன்றவற்றை வழங்கியிருக்கிறார்கள். அந்த மிதி வண்டிகளெல்லாம் துருப்பிடித்து அங்கே இருக்கின்றன. அவற்றையெல்லாம் எப்போது வழங்குவார்கள் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிப் பேரழிவு கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் ஏற்பட்டு, கடற்கரையில் வாழ்கின்ற மீனவப் பெருமக்களும் மற்றவர்களும் உயிரையும் உடைமைகளையும் பறிகொடுத்துப் பரிதவித்த நேரத்தில், அன்றைக்கு ஆட்சியிலேயிருந்தவர்கள் சரியாகக் கவனம் செலுத்தாத காரணத்தால், பெரிய கஷ்டத்தை மீனவ மக்கள் அனுபவித்து வந்தது நாடு அறிந்த ஒன்றுதான். அதற்குப் பிறகு, நம்முடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, மீனவ மக்களுக்குப் பல சலுகைகளை, அவர்களுக்கு மறு வாழ்வினை அளிக்கின்ற வகையிலே வாரி வழங்கிவருவதை இந்த நாடு அறிந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே, குறிப்பாக, சுனாமியால் பாதிக்கப்பட்ட நம்முடைய நாகை மாவட்ட மக்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வாரி வழங்கி வருகிறது. அதிலும், குறிப்பாக, வீடுகளை இழந்த மீனவ மக்களுக்கு இந்த ஆண்டு மிகச் சிறப்பான முறையிலே தொண்டு நிறுவனங்கள் மூலமாகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளைப் பற்றியும், கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்ற வீடுகளையும் அரசே தன்னுடைய பொறுப்பில் எடுத்து, வீடுகளைக் கட்டித் தந்துகொண்டிருப்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

அவர்களும் நானும் சென்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தாரங்கம்பாடி என்கின்ற மீனவ கிராமத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளைத் திறந்து வைத்தோம். அந்த வகையிலே, இன்றைக்குத் தொடர்ந்து வீடுகள் கட்டுகின்ற பணி தமிழ்நாடு கடற்கரை முழுவதும் நடந்துகொண்டிருக்கின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 110 கோடி ரூபாய் பொருட்கள் நம்முடைய முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் கடந்த வாரத்தில் வழங்கப்பட்டு, வருகின்ற 28 ஆம் தேதியிலேயிருந்து தமிழகம் எங்கும் வழங்கப்படவிருக்கிறது என்பதனை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு) அதேபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த பூம்புகார் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கான அந்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வு முடிந்தவுடன், உடனடியாக அந்தப் பணி நடைமுறைக்கு வரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகத்தினுடைய பணியை விரைந்து முடிக்க உறுதிமொழி அளித்திருக்கிற அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

30—

கட்டடம்

***35119—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS